RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2114

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் சமூக அமைப்பு, சமுதாய அமைப்பு மற்றும் உரிப்பொருள் சூழல்

**அ. முரளி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்- 605602, தமிழ்நாடு, இந்தியா.

# Social Structure, Social Organization and Theme in Sangam Literature

**A. Murali** [a, *]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts Collage, Villupuram-605602, Tamil Nadu, India

* Corresponding Author: muralianbazhagan1987@gmail.com

Received: 23-08-2022
Revised: 30-09-2022
Accepted: 12-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

This article explains the changes that took place in society, community and in epithet structures based on Sangam literature. And how the society is shaped by the changes seen in internal and external life. It also explains the changes that occurred due to the development level of the social systems, what are those development levels and about the life style of Sangam people. Overall, the article clearly explores the life style, family structure, social structures and social organization of the Sangam people.

**Keywords:** Sangam People, Society, External Life, Community

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் சமூக, சமுதாய, உரிப்பொருள் அமைப்பும், சமூக அமைப்பு ஆகியவற்றினை சங்க இலக்கியங்களின் துணைக்கொண்டு சமூகவியல் நோக்கில் கட்டுரை அமைந்துள்ளது.

அமைப்பு என்பது ஒழுங்கு படுத்தப்பட்ட ஒன்றைக் குறிக்கின்றது. அமைப்பு என்ற சொல் ஒரு கட்டமைப்பில் உள்ள பாகங்களின் முறையான உறவுகளைக் குறிக்கின்றது. இவற்றைப் போலவே சமூக இடைவினைகள் ஓர் ஒழுங்கு முறையிலும், அமைப்பு நிலையிலும் அமைந்திருந்தல் சமூக சமுதாய, உரிப்பொருள் அமைப்பு என்பதனை இந்த கட்டுரை மூலம் அறிப்படுகின்றன (Sarala Rajagopalan, 2002).

## சமூக அமைப்பு

மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழும் வாழிடச் சூழலைச் சமூகம் என்று அழைக்கின்றோம். இந்த சமூகத்தில் வாழ்வதற்கு வேண்டியத் தேவைகளையும் ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்திக் கொண்டு வாழும் நிலையை அமைப்பு என்பர், படிநிலை வளர்ச்சி என்பது மாற்றங்களை உள்ளடக்கியதாகும், மாற்றங்கள் பெற்று வாழ்வதே மானிட தத்துவமாகும்.

ஒரே நேர்க்கோட்டில் செல்லும் சமூக மாற்றம் மேல் நோக்கிய வண்ணம் முன்னேறியபடியே செல்லும் தன்மை கொண்டதாகும். இந்தப் போக்கிலே அது ஒரு நிலையிலிருந்துவேறொரு நிலைக்குக்

கடந்து செல்லும், இம்மாற்றம் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு முன்னேறிய வண்ணம் செல்வதால் முதல் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு வேறுபட்டதாகவும், மேம்பட்டதாகவும் காணப்படும். சமூக அமைப்பு கீழ்ப்பட்ட நிலைக்குச் செல்வதில்லை, முன்னோக்கியே செல்லும் மாற்றம் ஒன்றே மானிட வளர்ச்சிக்கு உகந்ததாக அமைந்தள்ளது.

சமூகவியல் தந்தை ஆகஸ்ட் கோம்ட் என்ற பிரேஞ்சு அறிஞர் சமூகம் அமைப்பு வளர்ச்சி நிலையில் ஒரே நேர்க்கோட்டில் வளர்ந்து வருகின்றது என்ற கோட்பாட்டை உருவாக்கினார். அவர் மனித இனம் பல பரிமானங்களைக் கடந்துதான் படிநிலை வளர்ச்சி நிலையில் வளர்ச்சியடைந்து வருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வளர்ச்சி நிலைகளை ஒட்டியே சமூக அமைப்பும் அந்தந்த நிலைகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து வந்துள்ளது. மனித மன வளர்ச்சியின் அடிப்படையில் சமுதாயமும் வளர்ச்சி பெற்று வருவதை மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு என்று மனித மனவளர்ச்சியின் அமைப்பின் படி சமூகமும் வளர்ந்து வருவதை வள்ளுவம் குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியரின் உயிரியல் கோட்பாடுகளின் வழி சமூகத் தோற்ற மரபினைக் காணும்போது அவர்காலத்திற்கு முந்தைய தொன்மையானச் சமூக அமைப்பினை அறியலாம்.

“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே”

என்றும்,

“புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்ல அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன்”

என்று தொல்காப்பியர், மாணிக்க வாசகர் கூற்றுவழி உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் மனித சமூக மரபினைக் காணும்போது தொன்மையானச் சமூக மரபாக சங்க இலக்கியத்தில் உள்ளது (Balasubramanian, 2019).

“மனிதன் தன் அடிப்படைத் தேவைகளாகிய
உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றை
இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்ப நிறைவு செய்துக்
கொள்கிறான், அதனுடன் இயற்கைச் சூழ்நிலையைத்
தன் அனுபவம், அறிவாற்றல் ஆகியவற்றால்”

பயன்படுத்தி மாற்றியமைத்து வாழ்ந்து வருகின்றான் (Balasubramanian, 2004).

இவ்வாறு இயற்கைச் சூழ்நிலையைச் சார்ந்து செயல்படும் மனிதன் அவற்றை தன் வாழ்க்கை நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டு வாழ கற்றுக் கொள்கிறான்.

இத்தகைய சமூகம் நீண்ட நெடிய வரலாற்றையும், அறுபடாத தொடர்ச்சியும் கொண்டுள்ள ஒரு சமூக அமைப்பாகும். இந்த நீண்ட நெடிய அறுபடாத தொடர்ச்சியில் அதன் சமூகப் அமைப்பு உருவாக்கம் அசைவியக்கமும் பல்வேறு சமூக முறைகளைத் ஏற்படுத்துகின்றன.

சங்ககால சமூகம் தொடங்கி இன்றைய நவீனச் சமூகம் வரை அதன் அமைப்பு அனைத்து நிலைகளையும் கடந்து வந்துள்ளது. இந்நிலையில் உலகளாவிய நிலையில் அதன் நீண்ட நெடிய தொடர்ச்சி ஒரு முன் மாதிரியாக அமைகின்றது. இத்தகைய முழுமுதலான மாதிரியை முன்வைத்து உலகளாவிய சங்ககால சமூகத்தின் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது.

## சமுதாய அமைப்பு

தமிழிலக்கியச் செம்மைக்கு முதல் அடையாளமாக விளங்குவன சங்க இலக்கியங்கள் அதனால் தான் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்கள் ஒரு மிகப்பெரிய இடத்தை வகின்றன.

உலக அரங்கில் இன்று தலைநிமிர்ந்து நிற்பதற்கும் தமிழ் மொழியும், தமிழர் பண்பாடும் நிலைபேறு அடைவதற்கும் சங்க இலக்கியங்கள் மிக முக்கியக் காரணமாக அமைகின்றன, சங்க கால அரசர்கள் சங்க காலப்புலவர்கள், சங்க கால மக்கள் இவர்களை மையப்படுத்திய மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்வியல் கொள்கைகள் போர்முறைகள், தொழில்கள், கலைகள், அகவாழ்க்கைமுறை முதலான அகப்புறம் சார்ந்த பல்வேறு செய்திகளையும் உள்ளடக்கியதாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் சங்க இலக்கியங்கள் சங்க கால அரசியல் சூழல், சமுதாயச் சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றை தமிழர்களின் அடையாளங்களாக காட்டுகின்றன. அத்தகைய சிறப்பு வாய்ந்த சங்க இலக்கிய சமுதாயம் தொடர்பாக இந்த கட்டுரை அமைந்துள்ளது. சமுதாய வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைப்பதாக அமைகிறது.

வரலாறு என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் நடக்கின்ற நிகழ்வுகளின் பதிவுகளாகும், நேற்று நடந்தவற்றின் பதிவுகள் இன்றைய வரலாறாகிறது. இன்று நடப்பனவற்றின் பதிவுகள் நாளைய வரலாறாகிறது. சுருங்கக் கூறவேண்டுமானால் ஒரு காலகட்டத்தில் நடக்கின்ற செயல்களின் பதிவுகள் என்னும் உண்மைகளின் தொகுப்பே வரலாறு எனலாம். இந்த வரலாறு சமுதாய வரலாறு என்ற நிலையில் அமைகின்றது. அவற்றுள் சமுதாய வரலாறு என்பது மக்களும் அரசும் இணைந்த சமூக நிகழ்வுகள் பற்றிய தொகுப்பேயாகும். விரிவாகக் கூற வேண்டுமானால் ஒரு சமுதாயத்தின் நிலப்பாகுபாடு, ஆட்சிமுறை மக்களின் வாழ்வியல் முறை, தொழில்கலைகள் முதலானவை பற்றிய பதிவுகளின் விரிவாக்க உண்மைகளே என்று கூறலாம். இந்த சமுதாய வரலாறு சங்க இலக்கியப் பகுப்பாகிய பத்துப்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள செய்திகளை விளக்குவதாக விளங்குகிறது.

## நில அமைப்பை வைத்து அமையும் சமுதாயம்

நில அமைப்புக்கும் மக்களின் பண்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு, இலக்கியங்களும் அதனை எடுத்துக்காட்டுகின்றன. சங்க இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தின் சமூக அமைப்பும் மக்களின் வாழ்க்கையும் நில அமைப்பை ஒட்டியே உருவாக்கப்பட்டன.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடிவது போன்று ஒரு நாட்டின் நில அமைப்பை அறிந்து கொண்டால்தான் அந்நாட்டின் சமுதாய வரலாற்றை முழுமையாக அறிந்துகொள்ள இயலும். மக்களின் வளமான வாழ்விற்கும் தாழ்விற்கும் அவர்கள் வாழும் நிலத்தின் அமைப்பே காரணமாக அமைகிறது. எனவேதான், ஒரு நாட்டின் வரலாற்றில் நிலமானது நிலையான ஒரு அடிப்படையினை அமைக்கின்றது.

ஒரு நாட்டின் மலைகள், ஆறுகள், அதன் தட்பவெப்ப நிலைகள், கனிவளம் ஆகியன அந்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வாழ்ககையினை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிகின்றன என்றும்

மக்களின் வாழ்க்கைத் தரம், உடல்வளம், அறிவுத்திறன், சமூக மரபுகள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றில் நாட்டின் புவியியற் சுவடுகளைக் காண முடியுமென்றும் கே.கே. பிள்ளை கூறுகின்றார்.

## தமிழகத்தின் நிலப்பாகுபாடு

ஒரு நாட்டின் இயற்கைச் சூழலுக்கு அதன் இலக்கியத்துக்கும் நெருக்கமான உறவுண்டு தமிழலக்கியத்தில் மிக அடிப்படையான தொரு கூறாக அமைந்தள்ள ஐந்திணைப் பாகுபாடு வட இந்திய இலக்கியத்துள் காணப்படாமைக்கு நிலவியற்கையே காரணமாகும.

உலகத் தோற்ற இயல்பை உணர்ந்த தமிழ் மக்களின் வரலாற்றுக்குட்பட்ட காலமாக விளங்கும் சங்க காலத்தில் தமிழர் நாகரிகம் நன்கு வளர்ச்சியடைந்து முழுமைப்பொற்றிருந்ததைச் சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன.

தமிழில் காணப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தினைகட்கும் தமிழக நிலவியற்கைக்கும் உள்ள உறவு மிகவும் உண்மையானதும் நெருக்கமானதும்மாகும். தமிழகத்தின் நிலவமைப்பில், மலையம் கடலும், காடும் வனநிலப்பகுதியும், வறண்ட பகுதியும் ஆங்காங்கே காணப்பட்டமையே அடிப்படையாகும்.

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன்மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவம் படுமே”

என்பதே அந்நூற்பா, இத்தொல்காப்பிய நூற்பாவின் படியே தமிழகத்தை நானிலமாகப் பகுத்தன (Balasubramanian, 2004).

## உரிப்பொருள் சூழல்

மனித உணர்வுகளின் வெளிப்பாடே உரிப்பொருள் ஒழுக்கமாக அமைகின்றது, இவ்வகையன மனித உணர்வுகள் நிலத்தின் தட்பவெட்ப மற்றும் பருவகால நிலைகளைச் சார்ந்து அந்தந்த நிலத்து வாழும் மக்களுக்கு உணர்வு வெளிப்பாடுகள் தோன்றுகின்றன. நிலமும் பருவகாலச் சூழ்நிலையும் மக்கள் வாழ்வியல் போக்கைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைவதால், மக்களிடம் கால நிலைக்கேற்ப உணர்வுகளைக் காணமுடிகிறது. உணர்வுகளின் வெளிப்பாடே ஐந்திணைகள் சார்ந்து மக்களிடம் வேறுபடுகின்றன. இதனை நிலத்தையும் காலநிலைகளையும் கொண்டு உரிப்பொருள் ஒழுக்கத்தை அறியலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| குறிஞ்சி நிலம் | - | புணர்தல் | - | கூதிர்காலம் |
| முல்லை நிலம் | - | இருத்தல் | - | கார்காலம் |
| மருத நிலம் | - | ஊடல் | - | பெரும் பொழுதுகள் ஆறும் |
| நெய்தல் நிலம் | - | இரங்கல் | - | பெரும் பொழுதுகள் ஆறும். |
| பாலை நிலம் | - | பிரிதல் | - | வேனிற்காலம் |

இவ்வாறு மனிதர்களின் உணர்வு வெளிப்பாடுகள் நிலவியலையம் பருவகால (தட்பவெப்ப) நிலைகளையும் சார்ந்து இருக்கின்றது.

காலவுணர்வு சார்ந்த புரிதல்களில் அகவாழ்விலும் புறவாழ்விலும் மனிதர்கள் அன்புடையவர்களாகவும், வீரவுணர்வுடையவர்களாகவும், செம்மாந்த மனிதநேயப் பண்பாளர்களாகவும், கொள்கைப் பிடிப்பில் உறுதிதளராது வஞ்சினம் மொழிபவர்களாகவும் சங்ககால மக்கள் வாழ்ந்துள்ளனர்.

மனிதகுலத்தின் பண்பாட்டு கட்டமைப்பும் நாகரிக வளர்ச்சியும் நில அமைப்பைச் சார்ந்தே உருவாகின்றன, சங்க கால மக்களின் வாழ்வியல் மரபு சமுதாயச் சூழலைச் சார்ந்து அமைந்ததாகும். மக்களின் வளமான வாழ்விற்கு நிலவியல் சூழலே சிறப்பிடம் பெறுகின்றது.

"செம்புலப் பெயல் நீர்போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்று மனிதர்களுக்கு இடையிலான மனிதநேயம், உறவின் வளர்ச்சி, பண்புகள் யாவும் நிலவளம் சார்ந்தே வளர்ச்சியடைவதைக் குறுந்தொகைப் பாடல் வழி அறியலாம் (Balasubramanian, 2004).

## முடிவுரை

சமூகம் என்பதன் பொருன்மையும் அமைப்பு முறைகளையும் பார்த்தோம். அமைப்பு என்ற சொல்லாட்சி உயிரினங்களின் உடலமைப்பின் கூறுகளைப்போல் சமூகத்திலும் பல்வேறு பரிமாணங்கள் கொண்டு ஒரு ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்ட நிலையில் விதிமுறைகளையும் பல்வேறுபட்ட பிரிவுகளையும் கொண்டு இயங்குவதால் சமூக அமைப்பு குறித்த பொருண்மைப் புலப்படுகின்றன. சமுதாய வாழ்வில் மனிதர்களுக்கு இடையிலான உறவுகள் மேம்பட கடமையுணர்வு அன்புணர்வு அடிப்படைத் தேவையாக அமைகின்றன. தொல்காப்பியரின் உரிப்பொருள் குறித்த சூழல் காரணிகளின் வகைப்பாடுகளையும், சங்க இலக்கியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகள் வழியாக அறியமுடிகிறது. சங்ககால புலவர்கள் இயற்கையின் ஒவ்வொரு இயக்க ஆற்றலையும் அறிந்தே உரிப்பொருள் அமைப்பு சூழலில் விளங்குகிறது.

## References

Balasubramanian, K.V. (2004) Pathupattu, New Century Book House, Chennai, India

Balasubramanian, K.V. (2019) Tholkappiyam, NCBH Publications, Chennai, India.

Sarala Rajagopalan, (2002) Sanga Ilakkiyam, Oli Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License